பம்மல் தெற்கு பகுதி தி.மு.க.சார்பில் தமிழர் திருநாள்தைப்பொங்கல் விழாவினை முன்னிட்டு தாம்பரம் மாநகராட்சிமண்டலம் 1 குழுத் தலைவர் பம்மல் தெற்கு பகுதி கழக செயலாளர் வே.கருணாநிதி ஏற்பாட்டில் புத்தாடைகள் அடங்கிய பரிசு தொகுப்பை குறுசிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்,காஞ்சி வடக்கு மாவட்ட கழக செயலாளர் தா.மோ.அன்பரசன் வழங்கினார்.உடன் மாவட்ட கழக துணை செயலாளர் இ.கருணாநிதி எம்.எல். ஏ, மேயர் க.வசந்தகுமாரி,தாம்பரம் மாநகராட்சி துணை மேயர் கோ.காமராஜ், வடக்கு பகுதி கழக செயலாளர் த.ஜெயகுமார், அ.தமிழ்மாறன் உள்ளிட்ட மாநில, மாவட்ட,பகுதி கழக நிர்வாகிகள் கழக முன்னணியினர் கலந்து கொண்டனர்.

இராயபுரம் மேற்கு பகுதி, 48 வது வட்டத்தில் வட்ட செயலாளர் இரா.பாலன் ஏற்பாட்டில் தமிழ் புத்தாண்டு பொங்கல் விழா கழகத் தோழர்களுக்கும் பொது மக்களுக்கும் பொங்கல் பரிசை தா.இளைய அருணா வழங்கினார். உடன் ராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் ஐட்ரிம் ஆர்.மூர்த்தி, ந.மனோகரன், வ.பெ.சுரேஷ் விஜயலட்சுமி விஜயகுமார் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

கழக பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி. சிறப்பிக்கிறார்!

தாம்பரம் மேற்குப் பகுதி சார்பில் சமத்துவப் பொங்கல் விழா!

எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ. தலைமை! எஸ்.இந்திரன் முன்னிலை!

தாம்பரம், ஜன.14-

தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்களின் திராவிட மாடல் நல்லாட்சியில் தாம்பரம் மேற்கு பகுதி தி.மு.க. சார்பில் 'எல்லோருக்கும் எல்லாமும்' என்ற சமத்துவக் கொள்கையின் அடிப்படையில் இன்று (14.01.2024, ஞாயிற்றுக்கிழமை) காலை சேலையூர் கேம்ரோடு சந்திப்பில் அமைந்துள்ள வாசுதேவா திருமண மண்டபத்தில் காலை 10 மணிக்கு மயிலாட்டம், ஒயிலாட்டம் தாரை தப்பட்டையுடன் கூடிய சமத்துவ பொங்கல் விழா நடைபெற உள்ளது.

தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் மாநகர கழக செயலாளர் எஸ்.ஆர்.ராஜா தலைமையில் 5-வது மண்டல குழு தலைவர் பகுதி கழக செயலாளர் எஸ்.இந்திரன் 4-வது மண்டலக் குழுத் தலைவர் டி.காமராஜ் முன்னிலையில், கழக பொருளாளர் நாடாளுமன்ற கழக குழு தலைவர் டி.ஆர்.பாலு எம்.பி. சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு 1000 கழக உடன்பிறப்புகளுக்கு புத்தாடைகள் மற்றும் பொங்கல் பரிசுகளை வழங்கி சிறப்புரை ஆற்ற உள்ளார்.

எனவே மாமன்ற உறுப்பினர்கள், பகுதி நிர்வாகிகள், வட்ட செயலாளர்கள், நிர்வாகிகள், மாநகர அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், இளைஞர் அணி, மாணவர் அணி, மகளிர் அணி மற்றும் கழகத் தோழர்கள் கலந்து கொண்டு சிறப்பித்துடுமாறு தாம்பரம் பகுதி கழக செயலாளர், மேற்கு பகுதி தலைவர் எஸ். இந்திரன் எம்.சி. கேட்டுக்கொண்டுள்ளார்.

மாவட்டச் செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் தலைமையில்

சேலம் கிழக்கு மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம்!

அமைச்சர் கே.என்.நேரு சிறப்புரை !

சேலம், ஜன. 14-

சேலம் கிழக்கு மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டம் வாழப்பாடியில் உள்ள சேலம் கிழக்கு மாவட்ட தி.மு.க. தளபதி மு.க. ஸ்டாலின் அறிவாலயத்தில் கலைஞர் அரங்கில் நடைபெற்றது, சேலம் கிழக்கு மாவட்டச் செயலாளர் எஸ். ஆர். சிவலிங்கம் தலைமையில், கழக முதன்மைச் செயலாளரும், அமைச்சருமான கே.என்.நேரு பங்கேற்று பேசினார்,

அப்போது பெத்தநாயக்கன்பாளையத்தில் இளைஞர் அணி இரண்டாவது மாநில மாநாடு வரும் 21 ம் தேதி நடைபெறுவது குறித்து ஆலோசித்தனர், பின்னர் சேலம் கிழக்கு மதியம் மேற்கு மாவட்டங்களில் இருந்து 1.5 லட்சம் இளைஞர்கள் நிர்வாகிகள் திரளாக கலந்து கொள்ள வேண்டுகோள் விடுத்துள்ளார், இதில் சேலம் மத்திய மாவட்ட தி.மு.க. செயலாளர் இரா. ராஜேந்திரன் எம்.எல்.ஏ., சேலம் மேற்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் டி.எம். செல்வகணபதி, மாவட்ட துணைச் செயலாளர்கள் பாரப்பட்டி சுரேஷ்குமார், சின்னதுரை, மாவட்ட அவைத்தலைவர் மு.ரா.கருணாநிதி, மாவட்ட பொருளாளர் ஆத்தூர் ஸ்ரீராம், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் டாக்டர் வீரபாண்டி பிரபு, மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் ஏ.ஏ. ஆறுமுகம், ஏற்காடு தொகுதி பொறுப்பாளர் புஷ்பராஜ், மாநில தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் தும்பல் கணேஷ், மனோகரன், சங்கர், பொதுக்குழு உறுப்பினர்கள் தமிழ்செல்வன், சோமசுந்தரம், மலர்விழி ராஜா, முத்துலிங்கம், சந்திர மோகன், ராஜா, கோபால், நகரச் செயலாளர் பாலசுப்பிரமணியம், வேல்முருகன்,

ஒன்றிய செயலாளர்கள் சக்கரவர்த்தி, மாதேஸ்வரன், வெள்ளாளப்பட்டி மூர்த்தி, அன்பு, சிவராமன், அழகுவேல், மணி, பாலமுருகன், விஜியகுமார், ரத்தினவேல், ஒன்றிய துணை செயலாளர், சேர்மேன் அன்பழகன், பழங்குடியின நல வாரிய உறுப்பினர் தாடி வெங்கடேசன், மாவட்ட அமைப்பாளர்கள் முனைவர் சீனிவாசன், ஆத்தூர் சேகர், ரமேஷ், திருநாவுகரசு, தனசேகரன், ராஜசேகர், பேரூர் செயலாளர்கள் வெங்கடேசன், பி.சி.செல்வம், சுப்பிரமணியன், பாபு, மாவட்ட துணை அமைப்பாளர்கள் பழனிசாமி, கலைச்செல்வன், ரேவதி மாதேஸ்வரன், ரமேஷ், தனபால், பன்னீர்செல்வம், கோபி,

பேரூராட்சி மன்ற தலைவர்கள் ராஜா, ஜெயசெல்வி பாலாஜி, பழனியம்மாள் ராசாமணி, கவிதா சக்கரவர்த்தி, ஒன்றிய அவைத் தலைவர்கள் சோலை கோவிந்தன் மாணிக்கம் ராமகிருஷ்ணன் சீனிவாசன், ஊராட்சி மன்ற தலைவர்கள் ஆறுமுகம், மாதேஸ்வரி மாது. அசலாம்பு பூபதி, காசிலிங்கம், கலாபெரியசாமி, பேரூராட்சி கவுன்சிலர்கள் சாந்தகுமாரி சரவணன், குமார், ராணி மாதேஸ்வரன் இங்கராணி மாதேஸ்வரன், கிளை செயலாளர்கள் சங்கர், சி.எம்.ஆறுமுகம் உள்பட நிர்வாகிகள் திரளாக கலந்து கொண்டனர்.

நாமக்கல் மேற்கு மாவட்டம் முழுவதும்

வண்ணக் கோலமிட்டு சமத்துவப் பொங்கல் வைத்து கொண்டாடுவீர்!

மாவட்டக் கழகக் கூட்டத்தில் மாவட்டச் செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில் அறிவிப்பு

நாமக்கல், ஜன. 14 -

நாமக்கல் மேற்கு மாவட்ட ஆலோசனை கூட்டம் நேற்று (12.01.2024) காலை 11.00 மணிக்கு திருச்செங்கோடு, வேலூர் ரோடு, தளபதியார் அரங்கில் நாமக்கல் மேற்கு மாவட்ட கழக செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் கலந்து கொண்டனர். முடிவில் மாவட்ட கழக செயலாளர் அவர்கள் தலைமை கழகத்தில் அறிவிக்கப்பட்ட தீர்மானங்களின் அடிப்படையில் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை விளக்கிப் பேசினார்.

சமத்துவப் பொங்கலைக் கொண்டாடுவோம்!

தீர்மானம் - 1 தமிழர்களின் பாரம்பரிய மிக்க தை 1 தமிழ் புத்தாண்டை முன்னிட்டு ஏழை,எளியோர்களும் பொங்கள் திருநாளை கொண்டாடும் வகையில், விவசாய பெருமக்களின் கோரிக்கையை ஏற்று ஒவ்வொரு குடும்ப அட்டைதாரர்களுக்கும் ஆயிரம் ரூபாய் மற்றும் பொங்கல் சிறப்பு பரிசு தொகுப்பு வழங்க ஆணையிட்ட கழக தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு நெஞ்சம் நிறைந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம்.

தீர்மானம் - 2 "கேலோ இந்தியா" விளையாட்டுப் போட்டி வரும் ஜனவரி 19 ஆம் தேதில் முதல் 31ஆம் தேதி வரை சென்னை, நுங்கம்பாக்கத்தில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் டென்னிஸ் விளையாட்டு அரங்கத்தில்

நடைபெறவுள்ளதால், இப்போட்டி குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் ஒன்றிய, நகர, பேரூர்களில் சிறுவர், சிறுமிகளுக்கு விளையாட்டுப் போட்டிகள் நடத்திட வேண்டும் என கேட்டுக்கொள்ளப்படுகிறது.

தீர்மானம் - 3 கழகத்தலைவர் அவர்களின் தலைமையில் நடைபெறும் திராவிட மாடல் ஆட்சி 'எல்லோருக்கும் எல்லாமும்' என்ற சமத்துவக் கொள்கையின் அடிப்படையில் நடைபெறுகிறது. தமிழ் நாட்டில் அனைவரும் ஒருவருக்கொருவர் உடன்பிறப்புகளாய், சமத்துவமாக வாழ்கிறோம் என்பதை பறைசாற்றும் வகையில், கழகத் தலைவர் அவர்களின் அறிவுரையின்படி, நாளை மற்றும் நாளை மறுநாளில் அனைத்து ஒன்றிய,நகர,பேரூர், வார்டு மற்றும் கிளைக் கழகங்களின் சார்பில் சமத்துவப் பொங்கல் கொண்டாடிட வேண்டும் என கேட்டுக் கொள்ளப்படுகிறது.

ஒன்றிய, நகர, பேரூர், கிளை, வார்டு பகுதிகளில் பொங்கல் வைப்பதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டு, எல்லோரும் சமம் என்பதை வலியுறுத்தும் வகையில் ஒன்றிய, நகர, பேரூர் பகுதிகளில் 'சமத்துவ பொங்கல்' என வாசகத்துடன் கோலமிட்டும், அதனை படம்பிடித்து சமூக ஊடகங்களில், "சமத்துவப் பொங்கல்" என்ற உடன் வெளியிட வேண்டும் என கேட்டுக் கொள்ளப்படுகிறது.

அனைத்து பகுதிகளிலும் இச்செய்தியை கொண்டு சேர்த்து மாவட்ட முழுவதும் பொங்கலை சமத்துவப் பொங்கலாக கொண்டாடுவோம். மேலும், இன்று முதல் ஒலிபெருக்கிகள் மூலம் தமிழ் கொள்கைப் பாடல்களை ஒலிக்கச் செய்திட வேண்டும்.

இவ்வாறு மாவட்டச் செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில் தீர்மானங்களை விளக்கிப் பேசினார்.

விருதுநகர் வடக்கு மாவட்டம்

விருதுநகர் நகர தி.மு.க. சார்பில் தைப் பொங்கல் புத்தாண்டு விழா !

அமைச்சர்கள் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் - தங்கம் தென்னரசு பங்கேற்பு !

விருதுநகர், ஜன. 14-

விருதுநகர் வடக்கு மாவட்டம் விருதுநகர் நகர தி.மு.க. சார்பில் தமிழ்ப் புத்தாண்டு தைப்பொங்கல் விழா தை 1ம் தேதி அன்று பேரறிஞர் அண்ணா சிலை அருகில் நடைபெற உள்ளது. இந்த விழாவில் அமைச்சர்கள் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், தங்கம் தென்னரசு கலந்து கொள்கின்றனர்.

இந்த நிகழ்ச்சியில் சட்டமன்ற உறுப்பினர் ஏ ஆர் ஆர் சீனிவாசன் கழக கொடியினை ஏற்றி வைக்கின்றார். நகர மன்ற தலைவர் எஸ் . ஆர். எஸ். ஆர். மாதவன் பொங்கல் வழங்குகின்றார். இந்த நிகழ்ச்சியில் செயற்குழு உறுப்பினர் கே.கே. எஸ். எஸ்.வி.டி.சுப்பாராஜ், வடக்கு ஒன்றியச் செயலாளர் ஆவுடையம்மாள், ஒன்றிய பெருந்தலைவர் சுமதி ராஜசேகர், பொதுக்குழு உறுப்பினர்கள் ஆர்.பி.மதியழகன், ஆர்.சுதாகர் தலைமை, ஸ்ரீராம் காசிராஜன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஆர் கிருஷ்ணகுமார், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் கே.ஜி.ராஜகுரு, எஸ்.கோதண்டராமன், மாவட்ட துணைச் செயலாளர் ஏ.ஆர்.சுபேதா, நகர துணைச் செயலார் ஏ.எஸ். கே.ரமேஷ்குமார், வை. மலைராஜன், எஸ்.ஆர்.எஸ். ஆர் மதன்குமார், எம்.கார்த்திகேயன், வக்கீல் எம்.எஸ். அசோக், வி.கே.சங்கர் ராஜ், பெருமாள்சாமி, ஆர். ராஜசெல்வம், கே.சௌந்தர் ராஜன், பொ. முருகன், எஸ் சபரி, ஆர்.பழனிச்சாமி, எஸ் நடராஜன், ஏ.சோசப்ராஜ், பி.ஜெகன் பால் பாண்டியன், ஜி.செல்வேந்திரன், ஏ.அண்ணா துரை, எ. போஸ், என். காஜாமைதீன், முரசொலி கந்தசாமி, எம். குருசாமி, ஜி.சதீஸ் சுந்தர், எல்.திருமாறன், ஸ்ரீ ராம நாதன், பி.ஏ.ஸ்ரீனிவாசகம், பி.மாரியப்பன், எம்.முருகன், ஏ.பி.காமராஜ், டி.ஆர். பி.ராஜரத்தினம், வகிதா ரகுமான், அ.மரியராசு, ஆர். பிர்தௌசி, இப்ராஹிம், கே.எம்.குமார் கலந்து கொள்கின்றனர்.

மறைந்த நகரச் செயலாளர் எஸ்.ஆர்.எஸ்.ராஜாக்கனி அவர்களின் நினைவுத் தூணுக்கு மாவட்ட விவசாய அணி துணை அமைப்பாளர் நேஷனல் ராமர் மாலை அணிவிக்கிறார். நிகழ்ச்சியினை நகர தி.மு.க. செயலாளர் எஸ்.ஆர்.எஸ். தனபாலன் செய்து வருகின்றார்.

வட்டச் செயலாளர் வரதை த.பரி வேண்டுகோள்:

112வது வட்டத்தில் பொங்கல் விழா!

நே. சிற்றரசு எம்.சி., நா.எழிலன் எம்.எல்.ஏ., வினோத் வோலாயுதம் பங்கேற்பு!

சென்னை, ஜன.14

சென்னை மேற்கு மாவட்டம், ஆயிரம் விளக்கு மேற்கு பகுதி 112வது வட்டத்தில் தை 1 தமிழ் புத்தாண்டு பொங்கல் விழா 15.01.2024 திங்கள் கிழமை காலை 9.00 மணியளவில் டிரஸ்ட்புரம் 6வது தெரு சந்திப்பில் வட்டச் செயலாளர் வரதை த.பரி தலைமையில் ஜெ.எஸ். அகஸ்டின்பாபு, டி.ஜோஸ்டேனியல், எம்.ஏ ஜெஸ்டின், புவி.பாலாஜி, என்.பி.இதயத்பாட்சா, எலிசபத் அகஸ்டின் எம்.சி. , எஸ்.பார்த்திபன், த.ஜசன்ட் முன்னிலையில் எஸ்.மனோகரன், வி. பொன்சீலன், ஜெனரேட் ராஜி, எஸ் பொற்கொடி, வி.ராஜா, எச்.சக்ரவர்த்தி, எல்.முருகன், பி. பாலாஜி, பி.சிவா, இ.ஜான் வரவேற்புரையாற்றுகின்றனர்.

மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு எம்.சி., நா.எழிலன் எம்.எல்.ஏ., பகுதி கழகச் செயலாளர் வினோத் வேலாயுதம் ஆகியோர் இனிப்பு பொங்கல் வழங்குகிறார்கள்.

இதில் மாவட்ட கழக நிர்வாகிகள் , பகுதி கழக நிர்வாகிகள், வட்ட கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள் இளைஞர் அணி, மகளிர் அணி, அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் சார்பு மன்ற நிர்வாகிகள் கலந்து கொள்ளுமாறு வரதை த.பரி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

திருத்தணி சட்டமன்ற தொகுதியில் மக்களின் கோரிக்கைகளை விரைவாக நிறைவேற்றும் வகையில் மக்களுடன் முதல்வர் திட்டத்தின் கீழ் திருத்தணி நகராட்சியில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் பொது மக்கள் பயன்பெறும் வகையில் முகாம் நடைபெற்றது. இதில் திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழக செயலாளரும் திருத்தணி சட்டமன்ற உறுப்பினருமான திருத்தணி எஸ்.சந்திரன் கலந்துகொண்டு பொதுமக்களின் பல்வேறு கோரிக்கை மனுக்களை பெற்றுக்கொண்டு சம்பந்தப்பட்ட அதிகாரியிடம் வழங்கி உடனடியாக தீர்வு காண வேண்டும் என்று அதிகாரியிடம் தெரிவித்தார். இதில் தீர்வு காணப்பட்ட பயனாளிகளுக்கு சான்றிதழ் வழங்கினார். உடன் அரசு அதிகாரிகள் நகர மன்ற உறுப்பினர்கள் கழக நிர்வாகிகள் பொதுமக்கள் என பலர் கலந்து கொண்டனர்.

தலைமை: சீ. கிருஷ்ணமூர்த்தி முன்னிலை நந்தனம் கி. மதி எம்.சி.

121அ வட்ட கழகத்தின் சார்பில் தமிழர் திருநாள் பொங்கல் விழா

மயிலை த.வேலு எம்.எல்.ஏ. பரிசு பொருட்களை வழங்குகிறார்!

சென்னை, ஜன.14-

கழகத் தலைவர், தமிழக முதல்வர் ஆணைக்கிணங்க, சென்னை தென் மேற்கு மாவட்டம், மயிலை மேற்கு பகுதி, 121அ வட்ட கழகத்தின் சார்பில், இன்று 14.01.2024 ஞாயிற்றுக்கிழமை, காலை 9 மணி அளவில், தமிழர்களின் புத்தாண்டு முதல் நாள், தை முதல் நாள், தமிழர்களின் திருநாள், சமத்துவ பொங்கல் விழா 121அ வட்ட கழக அலுவலகம் அமைந்துள்ள, அவ்வை சண்முகம் சாலையில், வட்ட கழக செயலாளர் சீ.கிருஷ்ண மூர்த்தி தலைமையில், மயிலை மேற்கு பகுதி கழக செயலாளர் நந்தனம் மதி எம்.சி. முன்னிலையில், சென்னை தென்மேற்கு மாவட்ட செயலாளர் மற்றும் மயிலாப்பூர் சட்டமன்ற உறுப்பினர், மயிலை த. வேலு, வட்ட கழகத்தின் சார்பில் நடைபெரும் சமத்துவ பொங்கல் விழாவினை தொடங்கி வைத்து, பொங்கல் விழா பரிசு பொருட்களை, 121வது வட்டத்திற்கு உட்பட்ட, மாவட்ட, பகுதி, வட்ட கழக நிர்வாகிகள், BLA2, BLC நிர்வாகிகள், கழக மூத்த முன்னோடிகள், கழக உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்களுக்கு வழங்கி சிறப்பிக்க உள்ளார்.

இச்சமத்துவ பொங்கல் விழாவில் பொதுமக்கள், மாவட்ட, பகுதி, வட்ட கழக, அணிகளின் நிர்வாகிகள், BLA2, BLC நிர்வாகிகள், கழக மூத்த முன்னோடிகள் மற்றும் கழக உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொண்டு விழாவினை சிறப்பிக்க உள்ளனர்.

திருவள்ளூர் மாவட்டம் ஆவடி மாநகாரட்சி அலுவலகத்தில் ஆவடி சட்டமன்ற தொகுதி மக்களின் பயன்பாட்டிற்காக HYUNDAI நிறுவன சி.எஸ்.ஆர். நிதி உதவியுடன் ரூபாய் 28 லட்சம் மதிப்பில் புதிய ஆம்புலன்ஸ் முன்னாள் அமைச்சரும் மாவட்டச் செயலாளருமான ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ கொடி அசைத்து துவக்கி வைத்தார். உடன் மாநகர மேயர் ஜி.உதயகுமார், மாநகர ஆணையர் திரு ஷேக் அப்துல் ரஹ்மான் , மாநகர பொறுப்பாளர் தசண் பிரகாஷ், மண்டல தலைவர் ஜி.ராஜேந்திரன், ஜோதிலட்சுமி நாராயண பிரசாத், அமுதா பேபி சேகர், பகுதி செயலாளர் நாராயண பிரசாத், பொன் விஜயன், கோ.சத்யாரவி, யுவராஜ், உள்பட பலர் உள்ளனர்